Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.258/2020 PW-1**

Name : திரு.கோவிந்தராஜ்
Father / Husband name :
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 20.11.2024

**Accused 1 and 2 Present.**

**சாட்சி மனுவின் படி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கொடுத்த புகாரில் சம்பவம் நடந்த உடனே ரோசனை போலிசார் சம்பவயிடத்திற்கு வந்து விசாரித்தார் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அவ்வாறு விசாரிக்கும்போது அனைத்து விவரங்களையும் கூறி, எதிரிகளையும் காண்பித்தேன் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் எதிரிகளையும் விசாரித்தார் என்றால் சரிதான். பின்பு நான் மீண்டும் மறுநாள் காலை ஒரு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரிலும், போலிசார் விசாரணையிலும் நான் போலிஸ் பூத்திலிருந்ததாகவும், யாரோ ஒருநபர் வந்து மருத்துவமனையில் வந்து அவசர சிகிச்சை பிரிவில் சண்டைசெய்ததாக என்னை அழைத்ததாக தான் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். என்னை அழைத்து நான் அங்கு சென்ற பிறகு அவசர சிகிச்சை பிரிவுக்கு வந்தபோது நிர்மலாவை தனியார் ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டிருந்ததார்கள், அப்போது தான் வெளியிலிருந்து வந்த எதிரிகள் மற்றும் 3 நபர்கள் பேச ஆரம்பித்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் பூத்திலிருக்கும் எனக்கு தகவல் சொன்ன நபரை பற்றி எனக்கு தெரியாது என்றால் தெரியும், அஞ்சலை மற்றும் சண்முகம் தான் சொன்னார்கள். மேற்படி விவரத்தை நான் போலிசார் விசாரணையிலும், புகாரிலும் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். அன்றைய தினம் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திலும், வெளியிலும் சிசிடிவி கேமரா பதிவாகும் வகையில் உள்ளது என்றால் சரிதான். அந்த சமயம் பணியிலிருந்த மருத்துவர்கள், நர்ஸ்சுகள் மற்றும் பொதுமக்கள் சுமாரா 7 பேர் பார்த்திருப்பார்களா என்றால் 8 நபர்களுக்கு மேல் பார்த்திருப்பார்கள். சம்பவம் நடக்கும்போது நான் எனது செல்போன் வழியாக வீடியோ

எடுத்ததாக கூறியுள்ளேன், அதனை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் வீடியோ எடுக்கும்போது எனது செல்போனை தட்டிவிட்டுவிட்டார்கள். எனது செல்போனை தட்டிவிட்டுவிட்டார்கள் என்று புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சொல்லியிருக்கிறேன். போலிசார் என்னை விசாரித்தபோது எதிரி நாகராஜ் சம்பவ சமயத்தில் குடிபோதையில் இருந்தார் என்றும், இரண்டுபேரும் எனது யூனிபார்மை கழட்டி வேலையில்லாமல் செய்துவிடுவோம் என்று மிரட்டினார்கள் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். காயம்பட்ட நபர்கள் நொளம்பூர் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். தனியார் ஆம்புலன்சின் ஓட்டுநர் சென்னை வியாசார்பாடியை சேர்ந்தவர் என்றால் சரிதான். எதிரிகள் என்னை கையால் நெட்டி தள்ளியதற்கு நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேனா என்றால் இல்லை. நான் மறுநாள் புகாரை உதவி ஆய்வாளரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை, தலைமைக்காவலர் ஜான்பாஸ்கோ என்பவரிடம் கொடுத்தேன். அது சம்மந்தமாக சம்பவயிடத்திற்கு வந்து போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அந்த சமயமும் போலிசார் வழக்கு பதிவு செய்யவில்லை, நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் விசாரித்தார்கள், ஆனால் வழக்கு பதிவு செய்யவில்லை. எவ்வளவு நாட்களுக்கு பிறகு வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் 5, 6 முறை விசாரித்தார்கள், ஆனால் வழக்கு பதிவு செய்யவில்லை. சம்பவ சமயத்தில் நான் தலைமைக்காவலராக இருந்தும், நான் கொடுத்த புகார் மீது வழக்கு பதிவு செய்யவில்லை என்று துணைக்கண்காணிப்பாளரையோ, காவல் கண்காணிப்பாளரையோ அணுகினேனா என்றால் அணுகவில்லை. சம்பவ சமயத்தில் நான் ரோசனை காவல் நிலைய ஆய்வாளரிடம் தான் பணிபுரிந்தேன் என்றால் சரிதான். அவரிடம் சென்று இந்த புகார் கொடுத்து சொன்னேனா என்றால் சொன்னேன். 12.05.2019 அன்று ஆய்வாளரிடம் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் தனியார் வாகனத்தை, ஆம்புலன்ஸ் என்று பதிவாகத வாகனத்தை எனது செல்வாக்கை பயன்படுத்தி மருத்துவரிடம் அந்த ஆம்புலன்சில் பரிந்துரை செய்து ஏற்றவேண்டும் என்று கூறி கமிஷன் பெற்றுக்கொண்டு ஏற்றிவந்தேன் என்றால் சரியல்ல. இதனை எதிரிகள் அவர்கள் பதிவு செய்து, முறையாக பர்மிட் வைத்து ஆம்புலன்ஸ் வைத்திருந்ததால் தட்டிக்கேட்டதால் எதிரிகள் மீது வேண்மென்றே நடக்காத சம்பவத்திற்கு நடந்ததாக பொய்யான வழக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல. பொய்யான புகார் என்பதால் தான் எங்கள் உயர் அதிகாரிகள்

யாரும் பலமுறை விசாரித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பின்னர் எஸ்.பி. யை பார்த்து வழக்கு பதிவு செய்து அதற்கு ஆதரவாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1, திண்டிவனம்.